*கவனிக்க.- 22.12.2017 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2052 - 2017 දෙසැම්බර් මස 29 වැනි සිකුරාදා - 2017.12.29

*2052 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 2390 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 2399 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2018, சனவரி மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, சனவரி மாதம் 05 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2387 – B81238 - 5403 (2017/12)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து **சிங்கள மொழி** : மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து **தமிழ் மொழி** : மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, **சிங்கள மொழி** :யில் அல்லது **தமிழ் மொழி** :யில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :.

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 **சிங்கள மொழி** : மூலத்தில் அல்லது **தமிழ் மொழி** : மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

*எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.*

(i) *முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;*

(ii) *ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;*

(iii) *ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;*

(iv) *சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;*

(v) *ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;*

(vi) *பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.*

*பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.*

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

*பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்*

(i) *ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.*

(ii) *ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.*

(iii) *நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.*

(iv) *சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.*

(v) *சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.*

(vi) *விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.*

(vii) *உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.*

(viii) *எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.*

(ix) *ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.*

(x) *வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.*

(xi) *உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.*

(xii) *மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.*

*பரீட்சை ஆணையாளர் நாயகம்.*

*இலங்கை பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பதவிகள் - வெற்றிடம்

## நீதிச்சேவை ஆணைக்குழு

"காதி" பதவி வெற்றிடங்களுக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்ளல்

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களில் நிலவும் "காதி" பதவி வெற்றிடங்களுக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்காக முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) கீழ் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரி முஸ்லிம் சமயத்தைச் சார்ந்த ஆணாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றுள்ள பட்டதாரி ஒருவராக அல்லது முஸ்லிம் சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் சான்றிதழ் பெற்றுள்ள மௌலவி ஒருவராக அல்லது கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அல் - ஆலிம் சான்றிதழ் பெற்றுள்ள ஒருவராக அல்லது சட்டத்தரணி ஒருவராக அல்லது அதற்குச் சமமான தொழில்சார் தகைமையுடைய ஒருவராக அல்லது ஓய்வுபெற்ற பதவிநிலை தரத்திலான உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் இதற்கு விண்ணப்பிக்கத் தகைமையற்றவர்களாவர்.

விண்ணப்பதாரர் இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றி ஒழுகுபவராகவும், 40 வயதிற்கு மேற்பட்டவராகவும், நல்ல தேகாரோக்கியம் உள்ளவராகவும், நல்லொழுக்கமுள்ளவராகவும் இருக்கவேண்டியதோடு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் மற்றும் விசேடமாக முஸ்லிம் சட்டம் பற்றிய நல்ல அறிவுடையவராகவும் சமூகத்தில் நல்ல வரவேற்பும், மதிப்பும் உள்ளவராகவும், விவாகமானவராகவும் இருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்படுகின்ற கால எல்லைக்கு நியமனம் செய்யப்படுவார்.

காதியாக நியமிக்கப்படுபவர் அப்பிரதேசத்திற்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருப்பது சட்டரீதியான அவசியமாகும்.

காதி ஒருவருக்கு ரூபா 7,500 மாதாந்தக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக உதவியாளர் சேவை, எழுதுகருவிகள் மற்றும் அஞ்சல் செலவுக்காக மாதாந்தம் ரூபா 6,250 கொடுப்பனவொன்றும் வழங்கப்படும்.

கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத் திற்கமைய, விண்ணப்பங்கள் 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் என்னை வந்தடையுமாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "காதி" எனக் குறிப்பிடல் வேண்டும். ஆவணங்களின் மூலப்பிரதிகள் விண்ணப்பத்துடன் அனுப்பப்படலாகாது.

ஆனந்தி கனகரத்னம்,
சிரேஷ்ட உதவிச் செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
த. பெ. இல. 573,
கொழும்பு 12,
2017, திசெம்பர் 11.

**அட்டவணை**

1. கம்பஹா - கம்பஹா, அத்தனகல்ல, மீரிகம, மஹர பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

2. மொனராகலை - மொனராகலை மாவட்டத்தின் மொனராகலை நீதிப் பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**1965 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 1969 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான முஸ்லிம் விவாக, விவாக நீக்கச் சட்டத்தின் (அத்தியாயம் 115) கீழ் காதிப் பதவிக்கான விண்ணப்பம்**

காதிப் பிரிவு :

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :

(உதாரணம் : இப்ராஹிம் ஏ. எல். எம்.)

2. முழுப்பெயர் :

(உதாரணம் : ஆதம் லெப்பே மொஹமட் இப்ராஹிம்)

3. நிரந்தர வசிப்பிடம் :

4. அஞ்சல் முகவரி :

5. பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

6. வயது : ☐☐

7. தேசிய இனம் :

8. சமயம் :

9. தே. ஆ. அ. அ. இல. :

10. தொலைபேசி இல. :

11. கல்வித் தகைமைகள் :

1. -----------------------------------------------
2. -----------------------------------------------
3. -----------------------------------------------
4. -----------------------------------------------
5. -----------------------------------------------

12. தொழில் தகைமைகள் :

1. -----------------------------------------------
2. -----------------------------------------------
3. -----------------------------------------------
4. -----------------------------------------------
5. -----------------------------------------------

13. விண்ணப்பதாரிக்கு எழுத, வாசிக்கத் தெரிந்த மொழிகள் :

14. விண்ணப்பதாரிக்கு முஸ்லிம் சட்டம் பற்றிய அறிவுண்டா ? :

ஆம் ☐ இல்லை ☐

15. விவாகமானவரா ? :

ஆம் ☐ இல்லை ☐

16. மனைவி உயிருடன் இருக்கின்றாரா ? :

ஆம் ☐ இல்லை ☐

17. முன்னைய, தற்போதைய தொழில்கள் (திகதி விபரங்களுடன்) :

| முதல் | வரை | தொழில் | இடம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

18. விண்ணப்பதாரிக்குரிய சொத்துக்களின் பெறுமதி :

ரூபா ☐

19. மாதாந்த வருமானம் :

ரூபா ☐

20. கடன்கள் இருப்பின் தொகை விபரம் :

ரூபா ☐

21. சென்ற பத்து (10) வருட காலப்பகுதியினுள் நீங்கள் முனைப்பாக அரசியலில் ஈடுபட்டிருந்தீரா ? :

ஆம் ☐ இல்லை ☐

22. நீங்கள் வருமானவரி செலுத்துமொருவரா ? :

ஆம் ☐ இல்லை ☐

23. உங்களுக்கெதிராக நீதிமன்றமொன்றில் குற்றவியல் வழக்கேதேனும் உண்டா ? இருந்ததா ? :

ஆம் ☐ இல்லை ☐

24. நீதிமன்றங்களில் தண்டனை பெற்றிருப்பின் அதுபற்றிய விபரங்கள் :

25. உங்களைப் பற்றி நன்கறிந்துள்ள, உங்களைப் பற்றிய தனிப்பட்ட விபரங்கள் பெறக்கூடியவர்கள் :

| | |
|---|---|
| பெயர் : | பெயர் : |
| முகவரி : | முகவரி : |
| தொலைபேசி இல. : | தொலைபேசி இல. : |
| தொழில் : | தொழில் : |
| உங்களையறிந்துள்ள காலப்பகுதி : | உங்களையறிந்துள்ள காலப்பகுதி : |

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- அனைத்து சான்றிதழ்களினதும் பிரதிகளை இத்தோடு இணைக்கவும்.

12-1032

---

## இலங்கை நிரந்தரக் கடற்படை

பயிலிளவல் உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் (CADET)

இலங்கை நிரந்தரக் கடற்படையில் பயிலிளவல் உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

2. பின்வரும் பிரிவுகளில் தகைமைகளைக் கொண்டுள்ள ஆண் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :

(அ) நிறைவேற்றுப் பிரிவு
(ஆ) ஒழுக்காற்றுப் பிரிவு
(இ) வழங்கல் பிரிவு
(ஈ) மரீன் படைப் பிரிவு
(உ) பொறியியல் பிரிவு
(ஊ) மின் பொறியியல் பிரிவு

3. **அடிப்படைக் கல்வித் தகைமைகள்** :

(அ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது குறைந்தபட்சம் ஆங்கிலம் மற்றும் கணிதப் பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்து இருத்தல்.

(ஆ) பின்வரும் பிரிவுகளுக்காக க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்து இருத்தல்.

(1) நிறைவேற்றுப் பிரிவு.- க. பொ. த. உயர் தரத்தில் உயிரியல், பௌதீகவியல், இரசாயனவியல் மற்றும் இணைந்த கணிதம் ஆகிய பாடங்களைப் பயின்றிருத்தல்.

(2) ஒழுக்காற்றுப் பிரிவு/ மரீன் படைப் பிரிவு.- க. பொ. த. உயர் தரத்தில் வணிகம், தொழில்நுட்பம் அல்லது கலைப் பிரிவு ஆகியவற்றில் கற்றிருத்தல்.

(3) வழங்கல் பிரிவு.- க. பொ. த. உயர் தரத்தில் வணிகப் பிரிவில் தோற்றி இருத்தல்.

(4) பொறியியல் பிரிவு
(5) மின் பொறியியல் பிரிவு
} க. பொ. த. உயர் தரத்தில் பௌதீகவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் தோற்றி இருத்தல்.

(இ) க. பொ. த. உயர் தரத்தில் பொது அறிவுப் பரீட்சையில் 30 இற்குக் குறையாத புள்ளிகளைப் பெற்றிருத்தல்

(ஈ) க. பொ. த. உயர் தர பெறுபேறுகளின்படி பல்கலைக்கழக அனுமதிக்கான குறைந்தபட்ச தகைமையைப் பெற்று இருத்தல் (பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பெறுபடிவத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றினை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.)

4. இலங்கை நிரந்தரக் கடற்படையில் இணைவதற்கு விண்ணப்பதாரிகள் பின்வரும் அடிப்படைத் தகைமைகளைக் கட்டாயம் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் :

(அ) *குடியுரிமை.-* இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) *வயது.-* விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 22 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(இ) *உயரம்.-* 168 செ. மீ. (5 அடி 7 அங்குலம்) இற்குக் குறையாது இருத்தல் வேண்டும்.

(ஈ) *நிறை.-* 52 கி. கி. இற்கு குறையாத நிறை.

(உ) *மார்பு.-* 76 செ. மீ. இற்குக் குறையாது இருத்தல் வேண்டும்.

(ஊ) *நிறப்பார்வை.-* STD II

(எ) *கட்புலக் கூர்மை.-* இடது கண் 6/ 6 மற்றும் வலது கண் 6/ 6 (மூக்குக் கண்ணாடி மற்றும் லென்ஸ் இன்றி).

(ஏ) *குடியியல் நிலை.-* விண்ணப்பதாரிகள் திருமணமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். பயிற்சியின்போதும், அதிகாரமளிக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு வருடம் ஆகும் வரையிலும் விண்ணப்பதாரிகள் திருமணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

5. **சேவை நிபந்தனைகள்** :

(அ) விண்ணப்பதாரிகள் இலங்கை நிரந்தர கடற்படையில் பயிலிளவல் உத்தியோகத்தர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படுவதோடு அடிப்படைப் பயிற்சிக் கற்கைநெறியினையும் தொடர வேண்டும். ஆட்சேர்ப்புப் பிரிவிற்குரிய அடிப்படைப் பயிற்சியினை வெற்றிகரமாக நிறைவுசெய்கின்ற பயிலிளவல் உத்தியோகத்தர்கள் பதில் கடமையாற்றும் உப லெப்டினன்ட்டினால் பதவிக்கு நியமிக்கப்படுவர்.

(ஆ) பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைப்படி நிரந்தர கடற்படைத் தளபதியின் தீர்மானத்தின் மூலம் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் அல்லது வெளிநாட்டில் பயிற்சிகளைப் பெறுவதற்குத் தயாராக இருத்தல் வேண்டும்.

(இ) எல்லா விண்ணப்பதாரிகளும் நடைமுறையில் உள்ள கடற்படைச் சட்டம், கட்டளை மற்றும் கடற்படை சட்ட வாசகத்தின் ஊடாக வலுப்படுத்தப்படும் சட்டங்கள் மற்றும் ஆலோசனை ஆகியவற்றுக்கு உட்படல் வேண்டும் என்பதோடு எதிர்காலத்தில் விதிக்கப்படும் சட்டங்கள் மற்றும் ஆலோசனைகளுக்கு கட்டுப்படல் வேண்டும்.

(ஈ) பதவிக்கான பயிற்சிக் காலப்பகுதியினுள் பயிலிளவல் உத்தியோகத்தர் ஒருவர் தனது சுய விருப்பின் பேரில் இடைவிலக விரும்பினால், கடற்படை நடைமுறைகளுக்கு அமைவாக எழுத்து மூலம் அனுமதியைப் பெற வேண்டும் என்பதோடு அதுவரை காலமும் அப்பயிலிளவல் உத்தியோகத்தருக்காக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு மேற்கொண்ட அனைத்துச் செலவினங்களையும் அவரது தாய்/ தந்தை அல்லது பாதுகாவலர் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு மீளச்செலுத்த வேண்டும்.

(உ) ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஒருவர் தனது பயிற்சிக் காலத்தில் எந்தவொரு நேரத்திலும் துர்நடத்தை காரணமாக அல்லது தான் பொறுப்புக்கூற வேண்டிய விடயம் காரணமாக அல்லது பதவிக்குப் பொருத்தமற்றவர் எனப் பொறுப்புக்கூற வேண்டியவர்களால் தீர்மானிக்கப்பட்டால், அச்சந்தர்ப்பத்தில் உரிய பயிலிளவல் உத்தியோகத்தரின் பிணையாளிகள்/ பாதுகாவலர்களினால் அதுவரை காலமும் அப்பயிலிளவல் உத்தியோகத்தருக்காக மேற்கொண்ட அனைத்துச் செலவினங்களையும் இலங்கைக் கடற்படைக்கு மீள் செலுத்துவதற்கு ஒப்புக்கொள்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பிரதிநிதி என்ற வகையில் கடற்படைத் தளபதியுடன் முறி ஒன்றிற்கு உட்படல் வேண்டும்.

(ஊ) பயிற்சிக் காலத்தினுள் விபத்துகளின்போது மற்றும் நீண்டகால ஊனங்களின்போது நடைமுறையில் உள்ள கடற்படைக் காப்புறுதியின் மூலம் பாதுகாப்பு அளிக்கப்படுவதோடு, அது தொடர்பாக விசேட நஷ்டஈட்டைச் செலுத்துவதற்கோ பொறுப்புக் கூறுவதற்கோ கடற்படை கட்டுப்படாது.

6. **சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்**.- 2016.01.01 ஆந் திகதியிலிருந்து 03/ 2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும். அதன்படி-

(அ) அடிப்படைச் சம்பளம் : ரூபா 22,333.00

(ஆ) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுகள் : ரூபா 7,800.00

(இ) சீருடை சுத்தப்படுத்தலுக்கான கொடுப்பனவுகள் : ரூபா 255.00

(ஈ) கஷ்டப் பிரதேசங்களுக்கான கொடுப்பனவுகள் (செயற்பாட்டுப் பகுதிகள்) : அடிப்படைப் பயிற்சியின் பின்னர்

(உ) கஷ்டப் பிரதேசங்களுக்கான கொடுப்பனவுகள் (செயற்பாடற்ற பகுதிகள்) : அடிப்படைப் பயிற்சியின் பின்னர்

(ஊ) ஏனைய மேலதிகப் படிகள் : விசேட கொடுப்பனவுகள் : ரூபா 1,000.00

(எ) தகைமைக் கொடுப்பனவுகள் : ரூபா 637.00

**குறிப்பு**.- 2020.01.01 ஆந் திகதியன்று பயிலிளவல் உத்தியோகத்தர்களின் அடிப்படைச் சம்பளம் ரூபா 32,380.00 ஆவதோடு 2016.01.01 ஆந் திகதி அடிப்படைச் சம்பளமானது பின்வருமாறு திருத்தத்திற்கு உட்படும் :-

2016.01.01 - ரூபா 18,984.00 - இணக்கக் கொடுப்பனவு ரூபா 9,778.00

2016.01.01 - ரூபா 22,333.00 - இணக்கக் கொடுப்பனவு ரூபா 6,429.00

2016.01.01 - ரூபா 25,682.00 - இணக்கக் கொடுப்பனவு ரூபா 3,080.00

2016.01.01 - ரூபா 29,031.00 - இல்லை

2016.01.01 - ரூபா 32,380.00 - இல்லை

7. பயிற்சியினைப் பெறும் காலப்பகுதியிலும் அதன் பின்னரும் உரித்தாகும் வசதிகள், கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகள் :

(அ) வருடம் ஒன்றிற்கு விடுமுறை புகையிரத ஆணைச்சீட்டு 3 சோடிகள் (உத்தியோகத்தர்கள், வாழ்க்கைத் துணை, பிள்ளைகள்) உரித்தாகும்.

(ஆ) முகாமில் வசிக்கும் உத்தியோகத்தர்கள் தமது வீட்டிற்குச் செல்வதற்கும் மீண்டும் வருவதற்கும் மேலதிக ஆணைச்சீட்டுக்கள் மற்றும் பஸ் கட்டணம் வழங்கப்படும் (கடற்படையின் பஸ் சேவை நடைமுறைப்படுத்தப்படாத பிரதேசங்களுக்காக).

(இ) சீருடை மற்றும் அது தொடர்பான உருப்படிகள் இலவசமாக வழங்கப்படும்.

(ஈ) வைத்திய வசதிகள் இலவசமாக வழங்கப்படும்.

(உ) ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகளுக்கு உணவு மற்றும் தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும்.

(ஊ) திருமணமான உத்தியோகத்தர்களுக்கு, மணமானோர் குடிமனைகளில் காணப்படும் வெற்றிடங்களுக்கு ஏற்ப விண்ணப்பிக்க முடிவதோடு அவ்வாறு வசிக்காத உத்தியோகத்தர்களுக்கு ரூபா 1,600.00 முதல் ரூபா 4,250.00 வரையான வீட்டு வாடகைக் கொடுப்பனவுகள் உரித்தாகும்.

8. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்** :

(அ) க. பொ. த. (சா. த.) பரீட்சையின் மேலதிக பாடங்கள் கவனத்தில் கொள்ளப்படாததுடன், விளையாட்டுப் பிரிவில் தனிப்போட்டி நிகழ்ச்சிகளில் தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் வெளிக்காட்டிய திறமைகள் ஆட்சேர்ப்பு நடைமுறையில் விசேடமாக கவனத்தில் கொள்ளப்படும்.

(ஆ) மேற்கூறப்பட்ட 3 மற்றும் 4 ஆம் தொடர் பந்திகளில் குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகள் மற்றும் கல்வித் தகைமைகளைப் பூர்த்திசெய்யாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தல்கள் ஏதுமின்றி நிராகரிக்கப்படும்.

(இ) இணைத்துக் கொள்ளப்படும் விண்ணப்பதாரிகளுக்கு சேர். ஜோன் கொத்தலாவெல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் இணைந்த பட்டப் பாடநெறிகளை அல்லது உள்நாட்டு/ வெளிநாட்டு பட்டப் பாடநெறிகளைத் தொடர்வதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கப்பெறும்.

(ஈ) எவரேனும் விண்ணப்பதாரியின் உயரம்/ மார்பு, குறிப்பிட்டதன்படி காணப்படாதவிடத்து கடற்படை சேவைக்குப் பயன்படும் விசேட தேர்ச்சி ஒன்று இருப்பின், கடற்படைத் தளபதியின் அனுமதியின்படி அவ்விண்ணப்பதாரி தொடர்பில் கவனத்தில் கொள்ளப்படும்.

(உ) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள், மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரச கரும மொழிகள் சட்டம் மற்றும் எதிர்காலத்தில் விதிக்கப்படும் கட்டளைகள் மற்றும் உறுப்புரைகளைப் பின்பற்றல் வேண்டும்.

(ஊ) பின்வரும் மாதிரிப் படிவத்திற்கு ஏற்ப விண்ணப்பப்படிவத்தில் உள்ள சகல பந்திகளையும் முடிந்தவரையில் தெளிவான கையெழுத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும். விண்ணப்பப்படிவமானது 2018.02.05 ஆந் திகதி நண்பகல் 12 மணிக்கு கிடைக்கப்பெறும் வகையில் "சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர் (ஆட்சேர்ப்பு), கடற்படைத் தலைமையகம், த. பெ. 593, கொழும்பு" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். பதிவுத்தபாலில் அனுப்பப்படாத விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பப்படிவத்தை அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பயிலிளவல் உத்தியோகத்தர் பதவி" எனக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதி மற்றும் நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்களும், வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக காணப்படாத விண்ணப்பப்படிவங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இது தொடர்பான மேலதிக தகவலை www.navy.lk எனும் வலைத்தளத்தினூடாக அல்லது 011-2215154 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

(எ) நிராகரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் தொடர்பாக அறிவிக்கப்பட மாட்டாது. ஏதேனும் விண்ணப்பப்படிவம் தபாலில் காணாமல் போனமை அல்லது தாமதமானமை தொடர்பான முறைப்பாடுகள் ஏதும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெற்றமை தொடர்பாக அறிவிக்கப்படமாட்டாது.

(ஏ) அரச சேவை/ கூட்டுத்தாபனங்கள்/ சபைகள்/ சிவில் தாபனங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை அவர்களது திணைக்கள/கூட்டுத்தாபன/சபை/சிவில் தாபனத் தலைவரூடாக அனுப்பி வைக்க வேண்டும் என்பதுடன் தெரிவுசெய்யப்படுமிடத்து பரீட்சார்த்தியை விடுவிக்க முடியும் என்பதற்கான சான்றிதழையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(ஐ) நேர்முகப் பரீட்சையின்போது அல்லது வேறு சந்தர்ப்பங்களில் அழைக்கப்படும்போது விண்ணப்பதாரிகள் பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதியை முன்வைக்க வேண்டும் :

(1) பிறப்புச் சான்றிதழ் மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ;

(2) விண்ணப்பித்து இருக்கும் பிரிவுக்கு அவசியமான தகைமைகளை உறுதிப்படுத்தும் கல்விச் சான்றிதழ்கள் ;

(3) பாடசாலை விடுகைப்பத்திரம் ;

(4) 6 மாத காலத்தினுள் பெறப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழ் ;

(5) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட வர்த்தக/ தொழில்நுட்பப் பயிற்சி அல்லது அனுபவம் குறித்த சான்றிதழ்கள் ;

(6) அண்மைக் காலத்தில் பெறப்பட்ட மூன்று நற்சான்றிதழ்கள், அதில் ஒன்று இறுதியாக கல்வி கற்ற பாடசாலை அதிபரிடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழ் ஒன்றும், ஏனையவை இரண்டு வருடத்திற்கு மேல் விண்ணப்பதாரியை நன்கு அறிந்த, பொறுப்புவாய்ந்த நபர் ஒருவரிடமிருந்து அல்லது தற்போதைய தொழில்தருநரிடமிருந்து (தொழில் புரிவாராயின்) பெற்றுக்கொண்ட சான்றிதழ்களாக இருத்தல் வேண்டும்.

(7) விளையாட்டு மற்றும் பயிலிளவல் தொடர்பான சான்றிதழ்கள் ;

(8) இப்பதவி தொடர்பாக விண்ணப்பதாரி அழைக்கப்படும் சகல சந்தர்ப்பங்களிலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டையானது விண்ணப்பதாரியினால் முன்வைக்கப்பட வேண்டும்.

(ஒ) குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பங்களில் இவ் ஆவணங்களை முன்வைக்கத் தவறுகின்ற விண்ணப்பதாரிகளின் விண்ணப்பம் கவனத்தில் கொள்ளப்படாது.

(ஓ) சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களின் மூலப்பிரதியை விண்ணப்பப்படிவங்களுடன் முன்வைக்கக் கூடாது என்பதோடு விண்ணப்பப்படிவங்களுடன் இணைத்து அனுப்பப்படும் மூலப்பிரதிகளின் பாதுகாப்பினை இலங்கை கடற்படை பொறுப்பேற்காது.

(ஔ) விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட கூற்றுக்களில் ஏதேனும் பிழை இருப்பின் அத்தகைய பிழை தெரிவிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகுதியிழப்பிற்கும், தெரிவின் பின்னர் கண்டுபிடிக்கப்படின் தண்டனையுடனான பதவி நீக்கத்திற்கும் விண்ணப்பதாரி உள்ளாவார்.

9. **ஆட்சேர்ப்பு நடைமுறை :**

(அ) மேலே குறிப்பிட்ட தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்கின்ற விண்ணப்பதாரிகள் இலங்கைக் கடற்படையினால் நடாத்தப்படுகின்ற அடிப்படை மருத்துவ பரிசோனையில் சித்தியடைதல் வேண்டும். முதலாவது பரிசோதனையில் உயரம், கண்பார்வை மற்றும் எடை என்பன பரீட்சிக்கப்படும். வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளுக்கு ஏற்ப உயரம், கண் பார்வை மற்றும் எடை என்பவற்றைக் கொண்டிராத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உள்வாங்கப்பட மாட்டார்கள். அப்பரிசோதனையில் தேர்ச்சி அடையும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் பின்வரும் உடற்தகைமைப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும். உடற்தகைமைப் பரிசோதனையில் தேர்ச்சி பெறும் விண்ணப்பதாரிகள் கடற்படைத் தளபதியினால் குறிப்பிடப்படுவதன் பிரகாரம் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அதன் பின்னர் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் கடற்படைத் தளபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய இறுதி நேர்முகப் பரீட்சைக் குழுமத்தின் முன்னால் தோற்றுவிக்கப்படுவர்.

(ஆ) உடற்தகைமைப் பரிசோதனையில் தேர்ச்சி பெறுவதற்கான தேவைப்பாடுகள் :

| உடற்பயிற்சி | சுற்றுக்கள் | நேரம் (நிமிடங்கள்/ செக்கன்கள்) |
|---|---|---|
| 1600 மீ. ஓட்டம் | - | 06 - 08 நிமிடங்கள் |
| தள்ளுதல் (Push up) | 25 அல்லது அதற்கு மேல் | 02 நிமிடங்கள் |
| இருத்தல் (Sit up) | 25 அல்லது அதற்கு மேல் | 02 நிமிடங்கள் |
| கை வளைத்தல் (Arm Bending) | 05 அல்லது அதற்கு மேல் | 02 நிமிடங்கள் |
| Standing Board Jump | 242 செ. மீ. அல்லது அதற்கு மேல் | - |
| கயிறு இழுத்தல் (Rope Climbing) | - | - |
| Shuttle Run | - | 11 செக்கன் |

(இ) நேர்முகப் பரீட்சைக்காகத் தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகளுக்கான பரீட்சை நடைபெறும் தினம், நேரம் மற்றும் இடம் என்பன அவர்களால் டகுறிப்பிடப்பட்ட முகவரிக்கு எழுத்து மூலம் தபாலில் அறிவிக்கப்படும். நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான போக்குவரத்துச் செலவு அல்லது வேறு செலவுகள் வழங்கப்படமாட்டாது.

(ஈ) இறுதி நேர்முகப் பரீட்சையில் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் இலங்கைக் கடற்படையின் மருத்துவச் சபையினால் நடாத்தப்படுகின்ற முழுமையான மருத்துவ பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

(உ) விண்ணப்பதாரி ஒருவரைப் பரிந்துரை செய்யக் கருதும் எவரேனும் அவ்வாறு செய்ய வேண்டியது விண்ணப்பதாரிக்கு சான்றிதழ் அளிப்பது மூலமாகும். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வது தொடர்பாக ஏதேனும் முறையிலோ தூண்ட அல்லது வலியுறுத்தல் முயற்சிப்பது விண்ணப்பதாரி தகைமை அற்றவராவதற்குக் காரணம் ஆகும்.

(ஊ) ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கான தகைமை அற்ற அடிப்படை நேர்முகப் பரீட்சையில் சித்தியடையாத விண்ணப்பதாரிகள் அது தொடர்பாக அறிவிக்கப்பட மாட்டார்கள்.

(எ) விண்ணப்பதாரிகளால் முன்வைக்கப்படுகின்ற கல்வி மற்றும் தொழில் தகைமைகள் தொடர்பான சான்றிதழ்கள் பரீட்சைத் திணைக்களம் மற்றும் அது தொடர்பான நிறுவனங்களுடன் இணைந்து அவற்றின் உண்மைத் தன்மை உறுதிப்படுத்தப்படும்.

(ஏ) சகல விண்ணப்பதாரிகளினதும் பாதுகாப்பு இசைவுச் சான்றிதழானது கடற்படைத் தலைமையகத்தின் மூலம் மீள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்

10. இலங்கைக் கடற்படைக்கு பயிலிளவல் உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்கும் நடைமுறையில் இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கடற்படைத் தளபதிக்கு உரித்தாவதோடு தேசிய பாதுகாப்பு, கற்படைப் போர் மற்றும் நிர்வாகத் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப மேலுள்ள தேவைப்பாடுகள் மற்றும் நிபந்தனைகளில் மாற்றங்களை ஏற்படுத்தும் இறுதித் தீர்மானம் கடற்படைத் தளபதிக்கு உரித்தாகும்.

குறிப்பு.- இவ்வர்த்தமானி அறிவித்தலானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வர்த்தமானி அறிவித்தல் தொடர்பாக சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் ஏற்பட்டால் சிங்கள மொழியே மேலோங்கி இருத்தல் வேண்டும்.

எஸ். எஸ். ரணசிங்க, WWV, RWP, USP, NDC, PSC, AOWC
துணைக் கடற்படைத் தளபதி,
கடற்படைத் தளபதி.

கடற்படைத் தலைமையகம்,
தபால் பெட்டி இல. 593,
கொழும்பு 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நிரந்தரக் கடற்படையில் பயிலிளவல் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்**

1. குடியுரிமை :----.

(இலங்கைப் பிரசையாவது பரம்பரை மூலமா அல்லது பதிவின் மூலமா என்பதைக் குறிப்பிடுக. பதிவுமூலம் பிரசையாயின் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடவும்).

2. விண்ணப்பிக்கும் பிரிவு (முன்னுரிமை அடிப்படையில்) :----.

3. முழுப்பெயர் :----.

(தேசிய ஆள் அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு)

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

5. நிரந்தர முகவரி :----.

6. தபால் முகவரி :----.

7. பிறந்த திகதி :----.

8. வயது :
வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----.
(2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 05 ஆந் திகதியன்று)

9. உயரம் : ---- (செ. மீ.)
மார்பு : ---- (செ. மீ.)
நிறை : ---- (கி. கி.)

10. நிரந்தர முகவரிக்கு அண்மைய பொலிஸ் நிலையம் :----.

11. மாவட்டம் :----.

12. தேர்தல் தொகுதி :----.

13. கிராம அலுவலர் பிரிவு :----.

14. தொலைபேசி இலக்கம் :----.

15. குடியியல் நிலை :----.

16. பால் :----.

17. கல்வி கற்ற பாடசாலைகள் :----.

18. கல்வி கற்ற பாடசாலை மற்றும் பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :

| பாடசாலை/ பல்கலைக்கழகத்தின் பெயர் | தோற்றியுள்ள பரீட்சைகள் | பரீட்சைக்குத் தோற்றிய வருடம் | சித்தியடைந்த பாடங்கள் (தரம் உள்ளடங்கலாக) |
|---|---|---|---|
| | க. பொ. த. (சா. த.) :<br>க. பொ. த. (உ. த.) :<br><br>வேறு : | | |

19. பாடசாலை/ பல்கலைக்கழகத்திலிருந்து விலகிய பின்னர் செய்த தொழில் பற்றிய விபரங்கள் :

| தொழில்தருநரின் பெயர் மற்றும் முகவரி | தொழிலின் தன்மை | சேவைக்காலம் | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

20. பெற்றோர் பற்றிய விபரங்கள் :

| முழுப்பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

21. இப்பதவி தொடர்பாக உள்ள விசேட தகைமைகள் :----.

22. விளையாட்டுக்களில் தற்போதைய சாதனைகள் பற்றிய விபரங்கள் :

(பங்குபற்றிய போட்டிகள், விளையாட்டுக் குழு, திகதி, பெற்றுக்கொண்ட தரங்கள் தொடர்பான விபரங்கள்) :----.

23. பாடசாலையில்/பல்கலைக்கழகத்தில் அல்லது வெளி நிறுவனங்களில் பெற்றுக்கொண்ட ஏனைய சாதனைக் குறிப்புகள் (திகதிகளுடன் விபரங்களைக் குறிப்பிடவும்.) : ----.

24. ஆயுதப்படை அல்லது தொண்டர் படையில், பயிலிளவல் பயிற்சிப் படையில் அல்லது இளைஞர் சாரணர் அமைப்பு ஆகியவற்றில் முன்னர் வகித்த சேவைகள் :----.

25. இலங்கைக் கடற்படை அல்லது ஏதேனும் ஆயுதப்படை அல்லது பொலிஸ் ஆகியவற்றில் இணைந்து கொள்வதற்காக ஏற்கனவே விண்ணப்பித்துள்ளீரா ? அவ்வாறாயின் அது தொடர்பான விபரங்களையும் முடிவுகளையும் குறிப்பிடவும் :----.

26. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றமொன்றில் தண்டிக்கப்பட்டுள்ளீரா ? அல்லது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளீரா ? அவ்வாறாயின் அது தொடர்பான விபரங்களைக் குறிப்பிடுக :----.

27. அரசாங்கத் திணைக்களமொன்றில் அல்லது அரச துறை/ சபை/ கூட்டுத்தாபனம் (அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படுகின்ற மத்திய வங்கி, தேசிய வங்கி, பல்கலைக்கழகங்கள், அரசினால் கட்டுப்படுத்தப்படும் சிவில் வியாபாரங்கள் மற்றும் கம்பனிகள் உள்ளடங்கலாக) ஆகியவற்றில் ஏலவே சேவையில் ஈடுபட்டிருப்பின் அத்தொழிலை முடிவுறுத்தியமைக்கான காரணங்கள்) :----.

28. நடத்தைச் சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :

| பெயர் | பதவி | தபால் முகவரி |
|---|---|---|
| | | |

29. விண்ணப்பதாரியினால் கையொப்பமிடப்பட வேண்டிய உறுதிமொழி :

மேற்குறித்த வினாக்களுக்குக் கொடுக்கப்பட்ட பதில்கள் என் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். அத்துடன் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கைவினைஞர்கள் (Artificers) பிரிவுக்கு தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் தொடர்பாக பிரயோகிக்கப்படும் விதிகளையும் பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகளையும் வாசித்துப் புரிந்து கொண்டேன் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

12-836

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைப் புகையிரத திணைக்களத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் உப புகையிரத நிலைய அதிபர்களை சேர்த்துக்கொள்ளல்

இலங்கைப் புகையிரத திணைக்களத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் உப புகையிரத நிலைய அதிபர் பதவிகளுக்கு வெற்றிடம் நிலவும் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள உப புகையிரத நிலையங்களுக்காக வேண்டி விண்ணப்பம் கோரப்படுகின்றது :-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | பெங்கிரிவத்த | 17. | செயலக தரிப்பிடம் | 33. | சரசவிஉயன |
| 2. | உடஹமுல்ல | 18. | திராணகம | 34. | மஹிய்யாவ |
| 3. | கொடகம | 19. | பியதிகம | 35. | உடதலவின்ன |
| 4. | அருக்வத்த | 20. | குமாரகந்த | 36. | எழுதுமட்டுவாள் |
| 5. | உக்கல்ல | 21. | மிதிகம | 37. | தெல்லிப்பளை |
| 6. | கடுகொட | 22. | கொட்டா வீதி | 38. | பெரகும் உயன |
| 7. | மொரகலே | 23. | ஹொரபே | 39. | செவனபிட்டிய |
| 8. | கம்மான | 24. | எருக்கலம்பிட்டி நாகவில்லு | 40. | புனுகக்குளம் |
| 9. | ரதெல்ல | 25. | விஜயரஜதஹன | 41. | நாவின்ன |
| 10. | துடெல்ல | 26. | போத்தலே | 42. | அங்கம்பிட்டிய |
| 11. | அலவத்துபிட்டிய | 27. | ஹீன்தெனிய பட்டிகொட | | |
| 12. | லியனகேமுல்ல | 28. | குடஹகபொல | | |
| 13. | சவரான | 29. | தெம்பிலிகல | | |
| 14. | வலஹபிட்டிய | 30. | கட்டுகுருந்த | | |
| 15. | முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் | 31. | ஆனவிலுந்தாவ | | |
| 16. | தலவத்தேகெதர | 32. | பாதேகம்கொட | | |

*1. **உப புகையிரத நிலைய அதிபர்களின் கடமை விபரம்**.- பிரவேசப்பத்திர விற்பனை நிலையத்திற்குப் பொறுப்பாக சேவையில் ஈடுபடுத்தப்படும் பிரதிநிதிகள் அந்தந்த நிலையங்களில் நிற்பாட்டப்படும் புகையிரதங்களின்படி 24 மணி நேரமும் பயணச்சீட்டு விற்பனை செய்தல் வேண்டும். பார்சல் கையேற்றல், கிடைக்கும் பார்சல்களை உரியவர்களிடம் ஒப்படைத்தல், தினமும் ஒன்றுசேரும் பணத்தை பிரதம புகையிரத கணக்கு உத்தியோகத்தருக்கு அனுப்பிவைத்தல், நிலையத்தை சுத்தமாக வைத்திருத்தல் மற்றும் புகையிரத முகாமையாளரினால் சந்தர்ப்பத்திற்கேற்ப ஒப்படைக்கப்படும் வேறு கடமைகளும் இப்பிரதிநிதிகளின் பொதுவான கடமையாகும்.*

*2. **கொடுப்பனவு**.- நிரந்தர சேவையாளர் தொகைக்கு உட்படாத பதவியாகும். தேர்ந்தெடுக்கப்படும் நபர்களுக்கு அந்தந்த நிலையத்தின் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு தரகுப்பணமும் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மாத்திரம் வழங்கப்படும். மேலும் ஆரம்ப தரகுப் பணம் ரூபா 310 ஆவதுடன் (குறைந்த தரகுப் பணம் 310 ரூபாவின்படி தரகுப் பணத்தைக் கணக்கிடும்போது கிடைக்கும் முழுத் தரகுப் பணம் 10,000 ரூபாவுக்கு குறைவாயின் 10,000 ரூபாவான தரகுப் பணம் கிடைக்கும்) தரகுப் பணத்திற்கு மேலதிகமாக 5,329 ரூபாவான கொடுப்பனவும் வழங்கப்படும்.*

*3. ஆண் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். ஒரு விண்ணப்பதாரி தனது தூர அளவிற்கு உட்பட்ட வெற்றிடம் நிலவும் மூன்று உப புகையிரத நிலையங்களை விருப்பத்தின் வரிசைப்படி விண்ணப்பிக்க முடிவதுடன், பரீட்சையின்போது உப புகையிரத நிலையம் இரண்டிற்கு அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு கூடிய புள்ளிகளைப் பெற்றிருப்பின் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விருப்பத்தின் வரிசைப்படி உப புகையிரத நிலையத்திற்காக நியமிப்பதற்குக் கருத்தில் கொள்ளப்படுவார். ஏதேனும் உப புகையிரத தலைமையகத்திற்காக வேண்டி தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்பு விருப்பத்தை தெரிவித்த ஏனைய உப புகையிரத நிலையம் வெற்றிடமாக காணப்பட்டாலும் மீண்டும் அந்த உப புகையிரத நிலையத்தினைக் கோருவதற்கு எந்த உரிமையும் கிடையாததுடன், அந்த உப புகையிரத நிலையத்திற்கான விருப்பும் இரத்துச் செய்யப்படும்.*

*4. **வயதெல்லை**.- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினத்தன்று 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்குக் கூடாமலும் இருத்தல் வேண்டும்.*

*5. **கல்வித் தராதரம்**.- க. பொ. த. (சா. தரப்) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலத்துடன் கணிதம் உட்பட சிறப்பு சித்தி நான்குடன் ஆறு விடயங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.*

*6. **வேறு தகைமைகள்** :*

(i) *விண்ணப்பதாரி குறிப்பிட்ட உப புகையிரத நிலையத்திலிருந்து 20 கி. மீ. தூரத்திற்குள் (நேரடி தூரம்) குறைந்தது 5 வருட காலம் நிரந்தர வதிவுடையவராக இருத்தல் வேண்டும். நியமனக் கடிதம் கிடைப்பதற்கு முன்பு இதுபற்றி உறுதிப்படுத்தும் பொருட்டு நம்பத்தகுந்த கடிதங்கள் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும். (கிராமசேவையாளர் சான்றிதழ், பிரதேச செயலாளரின் சான்றிதழ், தேர்தல் இடாப்பு பிரதி போன்றவையாகும்.) விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படும் முகவரி நிரந்தர முகவரியாக இருக்க வேண்டியதுடன் புகையிரத நிலையத்திற்குள்ள நேரடி தூரத்தை கணக்கிட வேண்டியது அம்முகவரியில் இருந்தாகும்.*

(ii) *விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.*

(iii) *உயரம் 5 அடி 4 அங்குலத்திற்கு குறையாமலும், மார்பளவு 32 அங்குலத்திற்கு குறையாமலும் இருத்தல் வேண்டும்.*

(iv) *உப புகையிரத நிலைய அதிபராக தற்போது கடமை புரிபவர்களுக்கும் அல்லது அவ்வாறு சேவை செய்து சேவை முடிவுறுத்தப்பட்டவர்களுக்கும் இதற்காக வேண்டி விண்ணப்பிக்க முடியாது.*

(v) *விண்ணப்பதாரி சிறந்த தேகாரோக்கியமும் சிறந்த கண் பார்வையும் உடையவர் என வைத்திய பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்பே தேர்ந்தெடுக்கப்படுவர். சிறந்த கண் பார்வை உடையவராக இருப்பது கட்டாயமாகும்.*

*7. **தேர்ந்தெடுக்கப்படும் முறை**.- புகையிரத முகாமையாளரினால் நடாத்தப்படும் எழுத்துமூல போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் திறமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவர். போட்டிப் பரீட்சையின்போது சகல விண்ணப்பதாரிகளும் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின்கீழ் இரு கேள்வித்தாள்களுக்கு விடையளித்தல் வேண்டும். பரீட்சையில் தகுதிபெறுவதற்காக வேண்டி ஒவ்வொரு விடயத்திலும் 40 வீத புள்ளிகளைப் பெறல் வேண்டும் :-*

(i) ***மொழித் தேர்ச்சி***.- *(காலம் : 1 மணித்தியாலம்) - முழுப்புள்ளி 100 ஆகும். விளங்கிக்கொள்ளுதலுடன், சரியான மொழி நடையை பிரயோகித்தல் சம்பந்தமாக விடயத்துடன் தொடர்புடைய கேள்விகளை உள்ளடக்கிய கேள்வித்தாளாகும்.*

(ii) ***நுண்ணறிவு.***- (காலம் : 1 மணித்தியாலம்) - முழுப்புள்ளி 100 ஆகும். கேள்வித்தாளிலேயே விடை எழுதவேண்டிய கணித குளறுபாடு, மொழித் தொகுதி, அட்டவணை, பொருந்திப் பார்த்தல் குறிப்பு, படம், வரைபு போன்றவற்றின் உதவியுடன் தர்க்க ரீதியாக சரியான உடனடித் தீர்மானம் எடுக்கும் சிறந்த ஆற்றலை பரிசீலனை செய்யும் பல்தெரிவிலான கேள்வித் தாளாகும்.

***குறிப்பு.***- (i) போட்டிப் பரீட்சையில் தகுதிபெற்றவர்கள் மத்தியில் அந்தந்த பயணச்சீட்டு விற்பனை நிலையத்தின்படி கூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரி குறிப்பிட்ட பயணச்சீட்டு விற்பனை நிலையத்திற்கு நியமிப்பதற்காக வேண்டிய தகுதிகளை ஆராயும் பொருட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்.

(ii) நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் ஏதும் வழங்கப்பட மாட்டாது.

(iii) தகுதிபெற்றவர்கள் சமமான புள்ளிகளைப் பெற்றிருப்பின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் புகையிரத பயணச்சீட்டு விற்பனை முகவரிடம் அல்லது உப புகையிரத நிலைய அதிபரின் கீழ் அனுமதிக்கப்பட்ட பதிலீட்டாளராக சேவை செய்துள்ள விண்ணப்பதாரிக்கு முதலிடம் வழங்கப்படும். அவ்வாறில்லாவிடின் குறிப்பிட்ட உப புகையிரத நிலையத்திலிருந்து மிகவும் கிட்டிய தூரத்தில் வசிப்பவர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

(iv) இவ்வறிவித்தலில் உள்ளடக்கப்படாத ஏதேனும் விடயம் சம்பந்தமாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் புகையிரத முகாமையாளருக்கு உள்ளது.

(v) இவ்வறிவித்தலில் சிங்கள மொழி மற்றும் தமிழ் மொழிகளுக்கிடையில் ஏதேனும் பொருந்தாத தன்மை காணப்படின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தல் சரியானதெனக் கருதப்படும்.

**8. சேவையில் ஈடுபடுத்தும் நிபந்தனை :**

(i) தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் புகையிரத முகாமையாளரினால் தீர்மானிக்கும்படி அல்லது குறைந்தது ரூபா 25,000 ஆன தொகை பாதுகாப்பு பிணைப்பணமாக புகையிரத முகாமையாளரின் பெயருக்கு வைப்புச் செய்யப்படல் வேண்டியதுடன் புகையிரத முகாமையாளருடன் கையொப்பமிடும் ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின்படியும் கடமை மேற்கொள்ளல் வேண்டும். அவ் ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை மீறுதல் சேவையை முடிவுறுத்துவதற்கு காரணமாக அமையும்.

(ii) இது ஒப்பந்த அடிப்படையிலாவதுடன் வருடத்திற்கு வருடம் இவ்வொப்பந்தம் புதுப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறு புதுப்பிக்கப்படாதவிடத்து ஒப்பந்தம் முடிவுபெறும்.

(iii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி தான் நியமிக்கப்படவுள்ள நிலையத்தின் கடமைகள் பற்றி தெரிந்துகொள்வதற்காக வேண்டி புகையிரத முகாமையாளரினால் கூறப்படும் புகையிரத நிலையத்தில் 14 நாட்கள் பயிற்சியைப் பெறல் வேண்டும். இப்பயிற்சிக் காலத்தில் கொடுப்பனவுகள் ஏதும் வழங்கப்பட மாட்டாது.

(iv) தனக்குப் பதிலாக உதவிக்காக வேலை செய்வதற்கு புகையிரத திணைக்களத்தின் அனுமதியுடன் உதவியாளர் ஒருவரை அனுமதித்துக்கொள்ள முடிவதுடன் உதவியாளருக்காக எவ்வித கொடுப்பனவும் திணைக்களத்தினால் வழங்கப்பட மாட்டாது. நிலையத்தின் முழுப்பொறுப்பும் உப புகையிரத நிலைய அதிபரையே சாரும்.

(v) பயிற்சியைப் பெறும் காலவெல்லைக்குள் அல்லது உப புகையிரத நிலைய அதிபராக கடமையாற்றும் காலவெல்லைக் குள் அல்லது நேர்முகப் பரீட்சையின்போது அல்லது வேறு ஏதேனும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியினால்/அவருக் காக தரப்பட்டுள்ள/வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பிழையானதெனவும் அங்கீகாரம் அற்றதெனவும் தெரியவருமிடத்து எவ் அறிவித்தலுமின்றியும் நஷ்டஈடுகள் எதுவுமின்றியும் உடனடியாக அவரின் சேவையைப் பெறல் முடிவுறுத்தப்படும்.

(vi) உப புகையிரத நிலைய அதிபராக தேர்ந்தெடுக்கப்படுபவர் அத்தேர்ந்தெடுப்பு மூலம் புகையிரத திணைக்களத்தில் எந்த நிரந்தர பதவியையும் வழங்குவதற்குத் திணைக்களம் பொறுப்புடையதல்ல.

***9. சேவை நிபந்தனை.***- (i) கையொப்பமிடும் ஒப்பந்தத்தில் ஏதேனும் நிபந்தனை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிபந்தனைகள் மீறப்படும் சந்தர்ப்பத்தில் அவரின் நியமனம் முடிவுறுத்தப்படும்.

(ii) புகையிரத முகாமையாளரினால் காலத்திற்கு காலம் இடப்படும் நிபந்தனைகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் கீழ்ப்படிவதற்கு இணங்குதல் வேண்டும்.

*10.* ***பரீட்சைக் கட்டணம்.*** *- சகல விண்ணப்பதாரிகளும் மீண்டும் வழங்கப்படாத ரூபா 500 ஆன தொகை பரீட்சைக் கட்டணமாக புகையிரத பொது முகாமையாளர் எனும் பெயருக்கு மக்கள் வங்கி கணக்கு இலக்கம் 176-1-001-29027313 இற்கு வரவு வைத்துப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். வேறு விதங்களில் பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படுவதற்கு காரணமாக அமையும். பூரணமற்றதும், முறையற்றதுமான விண்ணப்பப்படிவங்கள் யாவும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தில் தமது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும்.*

*11.* ***விண்ணப்பப்படிவம் முன்வைத்தல்.*** *- தட்டச்சு கடதாசி அளவுள்ள (ஏ-4) கடதாசியில் விண்ணப்பதாரியினாலேயே விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "உப புகையிரத நிலைய அதிபர் பதவிக்கான விண்ணப்பப்படிவம் .............................. புகையிரத நிலையம்" (இடைவெளியில் தான் விண்ணப்பித்த உப புகையிரத நிலையத்தின் பெயரைக் குறிப்பிட்டு) எனக் குறிப்பிட்டு "புகையிரத முகாமையாளர், தபால் பெட்டி இல. 355, புகையிரத முகாமையாளர் அலுவலகம், கொழும்பு 10" எனும் முகவரிக்கு 2018.01.29 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். (மாதிரி விண்ணப்பப்படிவம் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளது).*

*12.* ***விண்ணப்பப்படிவத்தை உறுதிப்படுத்தல்.*** *- விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரசாங்க பாடசாலை அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப்பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/ முப்படைகளின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்/ அல்லது பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியை வகிக்கும் உத்தியோகத்தர்/அல்லது வருடத்திற்கு ரூபா 2,37,060 இற்கு குறையாத ஒன்றிணைந்த சம்பளத்தைப் பெறும் அரச சேவையில் நிரந்தர பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.*

எஸ். எம். அபேவிக்ரம,
புகையிரத முகாமையாளர்.

புகையிரத முகாமையாளர் அலுவலகம்,
கொழும்பு 10,
2017, திசெம்பர் 12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் புகையிரத திணைக்களத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் உப புகையிரத நிலைய அதிபர்களை சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை**

விண்ணப்பிக்கும் உப புகையிரத நிலையம் (சிங்களத்தில்/ தமிழில்) :

முதலாவது விருப்பம் :----.
இரண்டாவது விருப்பம் :----.
மூன்றாவது விருப்பம் :----.

விண்ணப்பிக்கும் உப புகையிரத நிலையம் (ஆங்கிலத்தில்) :

முதலாவது விருப்பம் :----.
இரண்டாவது விருப்பம் :----.
மூன்றாவது விருப்பம் :----.

1. (i) முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.
(ii) முழுப்பெயர் (ஆங்கிலத்தில்) :----.
(iii) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.
(iv) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :----.

2. நிரந்தர முகவரி :-

(i) சிங்களத்தில்/ தமிழில் :----.
(ii) ஆங்கிலத்தில் :----.
(iii) தொலைபேசி இலக்கம் :- (வீடு) :----, கையடக்க :----.

3. (i) பிறந்த திகதி :----.

2018.01.29 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் [ ] மாதங்கள் [ ] நாட்கள் [ ]

(விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினத்தன்று)

(ii) உயரம் :----.

(iii) நெஞ்சளவு :----.

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் : [ ]

5. மாவட்டம் (சிங்களத்தில்/ தமிழில்) : [ ] ஆங்கிலத்தில் : [ ]

6. பிரதேச செயலாளர் பிரிவு (சிங்களத்தில்/ தமிழில்) : [ ]

(ஆங்கிலத்தில்) : [ ]

கிராமசேவையாளர் பிரிவு (சிங்களத்தில்/ தமிழில்) : [ ]

(ஆங்கிலத்தில்) : [ ]

7. உமது நிரந்தர வசிப்பிடத்திலிருந்து நீர் விண்ணப்பிக்கும் உப புகையிரத நிலையத்திற்குள்ள தூரம் (நேரடித் தூரம்) கி. மீ. மூலம் குறிப்பிடவும் :

| உப புகையிரத நிலையம் | தூர அளவு (கி. மீ.) |
|---|---|
| | |
| | |
| | |

8. கல்வித் தராதரம் :

க. பொ. த. (சா. தரம்) :

| வருடமும் சுட்டெண்ணும் | விடயங்கள் | பெறுபேறுகள் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

9. வேறு தராதரங்கள் :----.

10. பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் (சிங்களம்/ தமிழ்) : [ ]

11. நீர் ஏதாவது குற்றம் காரணமாக நீதிமன்றம் மூலம் குற்றவாளியாகக் கருதப்பட்டிருப்பின் விபரம் தருக :----.

12. .................................................... ஆந் திகதி, மக்கள் வங்கியின் ......................................... கிளையில் ரூபா 500 ஐ வரவு வைத்துப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை இணைத்து அனுப்புகிறேன். (வேறு வழிகள் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் விண்ணப்பப்படிவத்தை நிராகரிப்பதற்குக் காரணமாக அமையும்.) :----.

*13.* **விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்துகை :**

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானதெனவும் சரியானதெனவும் உறுதிமொழிகிறேன்.

(ஆ) என்னால் வழங்கப்பட்டுள்ள இத்தகவல்கள் பொய்யானதெனவும் பிழையானதெனவும் நான் நியமிக்கப்படுவதற்கு முன்பு கண்டு பிடிக்கப்படுமிடத்து நான் தகுதியற்றவராகக் கருதப்படுவதுடன் நியமனம் பெறப்பட்ட பிறகு கண்டு பிடிக்கப்படுமிடத்து எனது சேவையை முடிவுறுத்துவதற்கு நான் கீழ்ப்படிவதாகவும் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

*14.* **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இவ்விண்ணப்பப்படிவத்தை முன்வைக்கும் தேசிய அடையாள அட்டை இலக்கம் .................... ஐ உடைய திரு. ........... .................... என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் என்றும் அவர் இன்று என் முன்னிலையில் அவரின் கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(இறப்பர் இலச்சினையைப் பொறிக்கவும்.)

*12-933*